# Murugan of Kuravar and Skandan Mixed Karthikeyan of Aryas

**Kavadi M. Sundararajan**
*Retd. Addl. Supdt. of Police, Coimbatore*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358613

**Abstract**
*The deities identified with the five ecological landscapes (ainthinai) of ancient Tamilakam are, in fact, the earliest ancestors of the respective lands themselves. Kurinji – Seyon / Murugan; Pālai – Kotravai; Mullai – Mayon; Marutham – Vendan; Neithal – Varunan. In the early period, the Kurinji-land Kuravar clans worked in open terrains and later erected nadukal (hero stones), worshipping Seyon (Murugan) as their clan ancestor. Subsequently, temples for Murugan were built on hilltops, and worship continued there. Through the influence they established with kings, Aryan Brahmins took control of these temples. Murugan, who was originally a Tamil deity, was assimilated with the Aryan Skanda, and Skanda-related names such as Subramanian, Arumugan, and Karthikeyan were attributed to him. Murugan's beloved consort, the Kurava maiden Valli, was reduced to the status of a younger co-wife subordinate to Deivanai, the wife of Skanda. This article has been written to place before the world—especially before Tamils—the true history of Murugan, the manner in which the Aryan-born Skanda was merged with him, and the need to reclaim Murugan and Valli from this degraded condition.*

***Keywords :*** *Seyon, Skandan, Subramaniyan, Vetkuravan, Kuravar Padukalam, Kathirkaamam, Ceylon Vedahs, Bandilla Hetho, Tārakāsura, Vaagiriboli.*

**References**

1. https://ta.wiktionary.org/s/gz6
2. https://agarathi.com/word/%E0%AE%9A%E0%AF%80%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D
3. https://mandhiram.com/dictionary.php?searched_word=%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5% E0%AE%9F%E0%AE%BF#google_vignette
4. Continuity and Change: The Kataragama Cult in Sri Lanka by N.Shanmugalingam :
5. Vaagri in Tamil Nadu by Bakthavachala Bharathi
6. Thirukutraala Kuravanji, Thirumurukaatrupadai, Tholkaappiyam, Aingurunooru, Kurunthogai, Aganaanooru, Malaipadu kadaam, Mathurai Kaanji, Natrinai, Kalithogai, Puranaanooru, Perumbaanaatrup padai, Pathitrupathu, Paripaadal, kurinji Paattu.

# குறவர்தம் தமிழ் முருகனும் – ஆரிய ஸ்கந்தக் கலப்படக் கார்த்திகேயனும்

***காவடி மு. சுந்தரராஜன்***
கோயம்புத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழகத்தின் ஐவகை நிலங்களுக்கான கடவுளர்களாகக் குறிப்பிடப் படுபவர்கள் அந்தந்த நிலங்களின் மிக மூத்தோரே!. குறிஞ்சி – சேயோன் / முருகன், பாலை – கொற்றவை, முல்லை – மாயோன், மருதம் – வேந்தன், நெய்தல் – வருணன். தொடக்கத்தில் குறிஞ்சி நிலக் குறவர் குடியினர், திறந்த வெளிகளில் வேலை வைத்தும், பின்னர் நடுகல் வைத்தும் தங்கள் குல மூத்தோனாகச் சேயோன் முருகனை வழிபட்டனர். பிறகு மலைகள் தோறும் முருகனுக்குக் கோவில்கள் அமைத்து வழிபட்டனர். ஆரியப் பிராமணர்கள் அரசர்களிடம் ஏற்படுத்திக் கொண்ட செல்வாக்கால் கோவில்களைக் கைப்பற்றினர். தமிழ்க் கடவுளாக இருந்த முருகன், ஆரிய ஸ்கந்தனோடு கலக்கப் பட்டு, சுப்ரமணியன், ஆறுமுகன், கார்த்திகேயன் போன்ற ஸ்கந்தப் பெயர்களும் அவனுக்கு வழங்கப் பட்டன. முருகனின் காதல் மனைவி குற வள்ளி, ஸ்கந்தன் மனைவி தெய்வானைக்கு இளைய சகக் கிழத்தி ஆக்கப் பட்டாள். முருகனது உண்மையான வரலாற்றையும், ஆரிய இழி பிறவி ஸ்கந்தன் அவனோடு கலக்கப் பட்டது குறித்தும், இந்த இழி நிலையில் இருந்து முருகன் – வள்ளியைக் மீட்கவேண்டியதை உலகிற்கு, குறிப்பாகத் தமிழர்களுக்குக் கோரிக்கையாக வைத்தும் இந்தக் கட்டுரை உருவாக்கப் பட்டுள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *சேயோன், ஸ்கந்தன், சுப்பிரமணியன், வேட்குறவன், குறவர் படுகளம், கதிர்காமம், இலங்கை வேடர், ஆச்ணஞீடிடுடேச் ஏதுஞடணி, கூஞூச்டுண்தஞூச், வாக்ரி போலி.*

சேயோன் / முருகன் யார்? தமிழகத்தின் ஐவகை நிலங்களுக்கான கடவுளர்களாகக் குறிப்பிடப் படுபவர்கள் அந்தந்த நிலக்குடிகளின் மிக மூத்தோரே!. அந்த வகையில் குறிஞ்சி நிலக் குறவர் குடியின் தெய்வமாகக் குறிப்பிடப் படுபவன் சேயோன் / முருகன் ஆவான்.

சேயோன் என்பதற்கு வேறு பொருள் இருப்பினும்., இன மூத்தோன் என்ற பொருளே பொருத்தமாகத் தோன்றுகிறது. அதிலும், பின்னோக்கி ஐந்தாம் தலை முறையைச் சேர்ந்த இன முதியோன் என்று தான் அகராதி குறிப்பிடுகிறது[1] தற்போதும் மதுரைப் பகுதிகளில் சீயான் என்ற வார்த்தை பயன் பட்டில் உள்ளது. தாத்தாவிற்குத் தந்தையை அப்படி அழைக்கிறார்கள். மூன்றாம் பாட்டன் என அகராதி பொருள் கூறுகிறது.[2]

இன மூத்தோனைக் குறிக்கும் சேயோன் தான் சீயானாக மருவியிருக்கிறது.

**திரிகூடராசப்பக் கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சி**

*14.* கண்ணி கொண்டு வா!

*(3)* மீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்

வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போனநாள்

முருகன், செவ்வேட் குறவன் என்றே குறிக்கப் படுகிறான்.

**உட்பொருள்**

குறவன் முருகன் சூரனாகிய மாமரத்தைத் (கொக்கைத்) தான் படையெடுத்துச் சென்ற ஆறாவது நாளில் வென்றான்.

**சங்க இலக்கியங்களில் முருகன்**

கிடைத்த பழந்தமிழ் நூல்களில் மிகத் தொன்மை யானது தொல் காப்பியம் தான் என்பது சான்றோர் கருத்து. அதிலேயே தொல்காப்பியர், பலவற்றைத் தனது கருத்தாகக் குறிப்பிடாது வையம் பாத்திய பண்பே. சொல்லிய முறையான் சொல்லவும்படுமே, என்பனார் புலவர் என்று தான் குறிப்பிடுவார். அதில் உள்ளவை, தனது காலத்துக்கு முன்பே வழக்கில் இருந்தவைதான் என்பதைத் தான் அவ்வாறு கூறுகிறார். அப்படிப் பார்க்கும் போது, அவர் குறிப்பிடும் "சேயோன் மேய மைவரை உலகமும்" வரியில் வரும் குறிஞ்சிக் கடவுள் சேயோனின் தொன்மை குறித்துச் சொல்ல வேண்டியதே இல்லை

**வழிபாடு**

சங்க இலக்கியத்தில் மூன்று நிலைகளில் படிப்படியாக மாறிய முருக வழிபாட்டை நாம் பார்க்கலாம்.

தொடக்க நிலை, மலைகளில் குறவர்கள் தங்கள் குல மூத்தோனாக சேயோன் முருகனை வழிபட்ட முறையாகும். வேலை வைத்தும், பின்னர் நடுகல் வைத்தும் வழிபட்ட நிலை. வெறியாடலும், கழங்கு ஆரூடமும், குரவைக் கூத்தும், உயிர்ப் பலியும் இருந்தன. வழிபாடு திறந்த வெளியில் தான் நடந்தது.

அடுத்த நிலை மலைகள் தோறும் முருகனுக்குக் கோவில்கள் அமைத்து வழிபட்டதாகும். முருகனுக்கு உருவச் சிலைகள் அமைக்கப் பட்டன. பூசை உரிமை குறவர்களிடம் இருந்தவரை, உயிர்ப் பலிகளும், பிற தொடக்க நிலைச் சடங்குகளும் இருந்தன. இந்நிலையின் பின் பகுதியில் கோவில்கள் பிற நிலங்களுக்கும் பரவின. ஊ1 குறவர் கடவுள், தமிழர் கடவுள் என்றாகிப் பின், அனைவருக்கும் என்றாகி, உலகெங்கும் வியாபித்து விட்டார்.

மூன்றாவது நிலையில், அப்படி அமைந்த ஆலயங்களில் பிராமணர்களும் வந்து வணங்கத் தொடங்கிப் பூசை உரிமை கை மாறியதாகும். அசைவ முருகன் சைவ முருகனாக்கப் பட்டான். குறவர்களின் சடங்குகள் சடங்குகள் தவிர்க்கப்பட்டு, தமிழ்க் கடவுளாக இருந்த முருகன், ஆரிய ஸ்கந்தனோடு கலக்கப் பட்டு, சுப்ரமணியன், ஆறுமுகன், கார்த்திகேயன் போன்ற ஸ்கந்தப் பெயர்களும் அவனுக்கு வழங்கப் பட்டன. குறவள்ளி, ஸ்கந்தன் மனைவி தெய்வானைக்கு இளைய சகக் கிழத்தி ஆக்கப் பட்டாள். ஊ2.

**சமஸ்கிருத வேத மந்திரங்களைப் பூசையில்**
**ஓதும் முறை வந்தது.**
**..ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி**
**நா இயல் மருங்கில் நவிலப்பாடி**

**(தி.மு.ப. 177-189 )**

**ஆறெழுத் தாகிய மந்திரத்தை உச்சரித்து**

**(அட்ஷர)**

இலக்கியங்களில் கிடைக்கும் முருகன் குறித்த பாடல்களில் வழி பாட்டுப் பாடல்களே அதிகம்.

ஐங்குறுநூறு 259

**குன்ற குறவன் காதல் மட மகள்**
**மன்ற வேங்கை மலர் சில கொண்டு,**
**மலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி,**
**குன்றக் குறவனின் அன்பு மகள்.**

மன்றத்தில் பூத்த வேங்கை மலர்களைக் கொண்டு மலையில் வாழும் தன் குலமுதலான தெய்வம் முருகனை வணங்குகிறாள். இது சேயொன் முருகன் குறவர் குல மூத்தோனே என்பதை உறுதிப் படுத்துகிறது

**வெறியாடல்**

இது, தொல் தமிழ்க் குறவரின் மிகத் தொன்மையான வழி பாட்டு முறை. இறைச் சக்தி மனிதர் மூலம் ஆவேசமாக வெளிப் படுவதே இது. முதலில் இது முருகனை முன்னிட்டு மட்டுமே நிகழ்ந்தது.

களவுவழிக் காதல் மணம் புரிந்த குறவரின இணை, முருகன் - வள்ளி குறவரின இளம் ஆண் பெண்களின் காதற் கடவுளர்களாக ஆனார்கள். காதலர்களுடன் களவு வழிக் காதலில் சேர்ந்த

குற மகளிர் அவர்களின் பிரிவுத் துயரால் உடல் நலிவு அடைவதற்கு முருகன் மீது கொண்ட காதலே காரணம் என்று கூறி,, நலம் மீட்க, முருகனுக்கு வெறியாடல் நடத்துவர் குறவர்.

குறவர்களின் பூசாரி வேலன் . முருகனின் அடையாளமான வேலைக் கையில் கொண்டு முருகப் பெருமானைப் போற்றிக் கொண்டே, வெறியாடுவான். வெறியாடிக் குறி சொல்லும் போது கழங்குக் காய்களை உருட்டி எண்ணிக்கையின் படி பலன் சொல்லுவது வழக்கம்.ஊ[3] வெறியாடல் குறித்துக் கூறும் சங்க இலக்கியப் பாடல்கள் நிறைய உள்ளன. இதனைச் சிறப்பித்துப் பாடிய ஒரு புலவர், "வெறிபாடிய காமக் கண்ணியார்" எனப்பட்டார்.

ஐங்குறுநூறில் வெறியாடலுக்கென்றே வெறிப் பத்து என்ற அற்புதமான 10 பாடல்கள் உள்ளன. ஐங்குறுநூறு 246, (கபிலர்) - தோழி, சொன்னது,

**வெறி செறித்தனனே வேலன், கறிய**
**கல் முகை வயப் புலி கழங்கு மெய்ப்படூஉ**
**புன்புலம் வித்திய புனவர் புணர்த்த**
**மெய்ம்மையன்ன பெண்பாற் புணர்ந்து**
**மன்றில் பையுள் தீரும்,**
**குன்ற நாடன் உறீஇய நோயே.**

// வெறி (முருகன் மீது ஏற்பட்ட காதல்) என்று சொல்லி வேலன் வெறியாட்டுக்கு முனைகிறான். கற்குகையில் இருக்கும் புலியைக் கழங்குக் காய்களை உருட்டி மந்திரத்தால் கட்டி வைக்க முடியுமா?

வேறொரு குன்றத்தைச் சேர்ந்த காதலன் இத்தலைவியைக் கூடினான். அவனால் விளைந்த ஏக்கத்தால் வந்த நோய் மன்றத் தில் பலர் முன்னிலையில் திருமணம் செய்து வைத்தால் அன்றோ தீரும். வேலனின் வெறியாடல் தலைவியின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளாமல் ஆடப் படுவதைக் கண்டு, குறமகளிர் பகுத்தறிவுக் கண்ணோடு கேலி செய்கிறார்கள்.

இதே போன்று குறுந்தொகைப் பாடல் 363, ஐங்குறுனூறு 245, அகநானூறு பாடல் 138 குறிப்பிடத் தக்கவை.

இதில் முக்கியமான இன்னொன்று என்னவெனில், முருகனது வாகனம் குறித்த தகவலை அகநானூறு பாடல் 138 தருவது தான். உரு கெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇ, கடம்பும் களிறும் பாடி,

வெறியாட்டின் போது முருகனை மட்டுமல்லாது அவனது கடம்ப மலரையும், யானை வாகனத்தையும் போற்றிப் பாடி ஆடுவதாக உள்ளது. முருகனின் வாகனம் யானை யன்றி, மயில் அல்ல என்பதை உறுதிப் படுத்தும் பாடலிது.

மயில் ஆரிய இழிபிறப்பு ஸ்கந்தனுடைய வாகனமாக ஆரிய ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஊ[4]

பின்னாளில் ஏற்படுத்தப்பட்ட ஸ்கந்தக் கலப்பால் தான் முருகனுக்கு மயில் தான் வாகனம் என்ற புரட்டு இங்கு ஊன்றப்பட்டு விட்டது.

தற்போதைய சாமியாடுதல் / அருள் வாக்கு குறவர் வழிபாட்டின் வெறியாடலே.. சோழிகள், முத்துகள் எண்ணிக்கையில் குறி சொல்லுதல், குறவரின் கழங்குக் காய் முறையே..

**விலங்குப் பலி**

சேயோன் / முருகன் மிகச் சினமிக்க கடவுள்.. இவனை அமைதிப் படுத்த முன்னாளில் விலங்குப் பலி கொடுத்து வழிபட்டார்கள். (முருகு உறழ் முன்பொடு கடுஞ்சினம் - நற்றிணை.225, முருகன் சீற்றத்து உழுகெழு குரிசில் - புறநானூறு 16, சினமிகு முருகன் தன்பாங் குன்றத்து.. - அகநானூறு : 59 )...

முருக வழிபாட்டில் ஆட்டைப் பலியிடுதல் குறவர்களின் வழக்கம்.. ஊ[5]

**"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து"**
**(திருமுருகாற்றுப்படை, 218)**
**மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇ**
**(குறுந்தொகை, - 263),**

இவை போன்று இன்னும் பாடல்கள் உள்ளன.

**முருகன் வழிபாட்டில் காவடி**

காவடி தூக்கும் முறை குறவர் குடியிடம் தோன்றிய வரலாற்றை மலைபடுகடாம் அருமையாக எடுத்துரைக்கின்றது.

> **..சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கி,**
> **பொருது தொலை யானைக் கோடு சீர் ஆகத்,**
> **தூவொடு மலிந்த காய கானவர், 151-155**

குறவர்கள் / கானவர்கள் மலையில் எடுத்த தேன், அகழ்ந்தெடுத்த கிழங்கு வேட்டையாடிய பன்றி உட்பட்ட விலங்குகளின் கறி வைக்கப் பட்ட வட்டில்கள் ஆகிய சுமையை எளிதில் சுமப்பதற்கு ஏதுவாக யானைத் தந்தங்களின் இரு புறமும் அவற்றைச் சமமாகப் பகிர்ந்து கட்டித் தோளில் சுமந்து வீடு திரும்புவதைத் தான் இப்பாடல் வரிகள் குறிப்பாகச் சுட்டுகின்றன.

அந்த வழக்கப்படி மலைகளில் வாழ்ந்த குறவர்கள், தங்கள் குல தெய்வமான சேயோன் முருகனை அவன் எழுந்தருளி உள்ள மலைகளுக்குச் சென்று வழிபடுவதற்காக, காவு (பலி, படையல்), பூசை பொருட்களின் சுமைகளை அதேபோல் தடியைப் பயன்படுத்தித் தூக்கிச் சென்றனர். அதுவே, காவுத் தடி எனப் பெயர் பெற்று, நாளாவட்டத்தில் காவடி ஆகிவிட்டது. *3 ஊ*[6] சுமைதூக்கப் பயன் படுத்தப்பட்ட காவடி பின்னர் பக்தியின் வழி வழிபாட்டுச் சின்னம் ஆகி விட்டது.

மற்றப் பூர்வகுடித் தமிழ்க் கடவுள்களான மாயோனுக்கோ, கொற்றவைக்கோ, வேந்தனுக்கோ, வருணனுக்கோ காவடி தூக்கும் வழக்கம் இல்லை!

**குரவைக் கூத்து**

மதுரைக் காஞ்சி, ‘மன்று தொறு நின்ற குரவை’ என்றும், நற்றிணை, ‘வேங்கை முன்றில் குரவை’ என்றும், ஐங்குறுநூறு ‘வெண்மணல் குரவை’ என்றும், அகநானூறு ‘கொண்டல் இடுமணல் குரவை’ என்றும், கலித் தொகை, “பண் அமை இன்சீர்க் குரவை” என்றும் குறிப்பிடுகின்றன. இக்கூத்து குறிஞ்சி நிலத்தில் தான் முதலில் தொடங்கியது. *ஊ*[7]

குரவைக் கூத்து குறித்துப் பல நூல்களில் கூறப்பட்டு உள்ளது *(தி.மு.ப. 190-197, 205 - 217, ம.ப. கடாம். 318-322; நற். 276:8-10; புறம்.129:1-3).*

> ***மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு 205***
> ***மென்தோள் பல்பிணை தழீஇ, தலைத்தந்து,***
> ***குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே;***
> ***அதாஅன்று, ..(தி.மு.ப. 205 - 217)***

தி..மு. படை வரிகள் *205 - 217* ல் முருகனே மலைகள் தோறும் சென்று குறமகளிருடன் ஆடிக் களிப்பதாகக் கற்பனை செய்துள்ளார் நக்கீரர். முருகன் குறித்த வருணனைகள் மிக அருமையானவை யென்றாலும், முருகனைக் கோபிகைகளுடன் காமக் கொட்டமடிக்கும் கண்ணனாக்க முயன்றிருப்பது முரணான ஒன்று.. பல பாடல்கள் முருகனின் வீரம், அழகு, வள்ளியுடனான காதல் குறித்து மட்டுமே கூறுகின்றன. முருகன் - வள்ளி குறிஞ்சித் திணைக் காதல் சங்க காலத்திற்குப் பல தலைமுறைகள் முந்தையது. நக்கீரர், பின் வந்த முருகன் - ஸ்கந்தக் கலப்பிற்குத் துணை போகிறார்.

**வள்ளிக்கூத்து**

தொல்காப்பியத்தில் வள்ளிக் கூத்து என்றொரு நடனமும் குறிப்பிடப் படுகிறது.. ஆய்வு நூல்களும் உள்ளன. *ஊ8, ஊ9*

முருகன் போர்க் கடவுள்.. அதனால்தான் முருகன் தலங்களைப் படை வீடுகள் என்று அழைக்கிறோம். வெற்றிவேல் - வீரவேல் என்பது தமிழர்தம் போர் முழக்கம்... வேல் அவனுக்கு ஆயுதமாகியதால், வேலன், வேலாயுதன். என்றும் அழைக்கப் பட்டான். குறிஞ்சிப் பாட்டு *50-53*, பெ.பா. படை *75*, நற்றிணை *1-2*, பதிற்றுப் பத்து - இரண்டாம் பத்து *11.* , பரிபாடல் *51-4, 970-71* போன்ற பாடல்கள் முருகன் வீரத்தைச் சிறப்பிக்கின்றன.

**வள்ளி - முருகன் குறிஞ்சித் திணைக் காதலர்களே**

ஒரு மலை நாட்டுத் தலைவன் சேயோன் (முருகன்) இன்னொரு மலை நாட்டுத் தலைவன் நம்பியின் மகள் வள்ளியை காதலித்து (களவுவழி) மணம் முடிக்கும் குறிஞ்சித் திணைக் காதல் கதையே வள்ளி - முருகன் கதை. இது

போன்ற குறிஞ்சித் திணைப் பாடல்கள் நிறைய உள்ளன.

**மட மதர் மழைக் கண் இளையீர்! இறந்த**
**கெடுதியும் உடையேன் என்றனன்**

***(கு. பா. 141 - 145)***

மடமையுடைய அழகான ஈரக் கண்களையுமுடைய இளையவர்களே! நான் வேட்டையாடிய விலங்கு தப்பிப் போன நிலையில் உள்ளேன் என்றான். நாங்கள் அதற்குப் பதில் கூறவில்லை. அதனால் அவன் வருந்தி, கலங்கி, என்னிடமிருந்து தப்பிய விலங்கை நீங்கள் காட்டாவிட்டாலும், என்னுடன் பேசுவது உங்களுக்குப் பழியாகுமா, மென்மையானவர்களே?

முருகன் - வள்ளி கதையிலும் இது போன்ற காட்சி உண்டு. முருகன் மானைத் தேடி வருவதும், வள்ளி மீது மையல் கொள்ளுவதும் அக்கதையிலும் உண்டு.

**மையல் வேழம் மடங்கலின் எதிர்தர,**
**உய்வு இடம் அறியேம் ஆகி, ஒய்யென**

***(கு.பா.165-169)***

யானை யிடமிருந்து வள்ளியை முருகன் காத்த கதைபோல், இப்பாடலிலும் தலைவன் தலைவியைக் காப்பது போல் வரும்.

**..என் உயவு அறிதியோ, நல் நடைக் கொடிச்சி!**
**முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல**

***(நற்றிணை 82)***

தன் காதலியை வள்ளியுடன் ஒப்பிட்டு, முருகன் - வள்ளியின் காதல் போல் தங்கள் காதலையும் கருதுகிறான் தலைவன்.

## ஆரிய ஸ்கந்தனுடன் கலப்பு

ஆரியப் பிராமணர்கள் பிழைப்பிற்காக, முருகனைத் தங்கள் ஸ்கந்தனோடு இணைத்தனர். ஊ10 ஊ11 வள்ளிக்கு மூத்த சகக் கிழத்தியாக இந்திரனின் வளர்ப்பு மகள் தெய்வானை/தேவசேனா செருகப் பட்டாள்.

தற்போது நடைமுறையில் இருக்கும் வள்ளி திருமண நாடகக் கதை (கந்த புராணம்- கச்சியப்பப் பட்டாச்சாரியார்). வடக்கத்தி ஸ்கந்த புராணத்தின் தழுவலே. ஆரிய ஸ்கந்தனுடைய பிறப்பு அருவருக்கத் தக்க வகையிலும், குழப்பமான வகையிலும் ஆரிய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. ராமாயணத்தில் சிவனுக்கும், கங்கைக்கும் அக்னி மூலம் பிறக்கிறார். மகாபாரதத்தின் வன பர்வத்தில் அக்கினிக்கும் சப்தரிஷிகளின் மனைவிகளின் உருவில் வரும் சுவாஹாவுக்கும் பிறக்கிறார். சல்லிய பருவத்தில் சிவனுக்கும், கங்கைக்கும் அக்னி மூலம் பிறக்கிறார். அனுசாசன பர்வத்தில், சிவன், அக்னி இருவர் உயிர்ச் சத்துகளையும் தாங்கி, கங்கை ஸ்கந்தனைக் கருக் கொள்கிறாள். ஸ்கந்த ஆபாசத்திற்கு ஸ்கந்த புராணம் உள்ளிட்ட இன்னும் பல நூல்களைக் காட்டலாம்.

ஆனால், முருகனின் பிறப்பு குறித்து எந்த ஆபாசக் கதையும் இல்லை. அவன், குறிஞ்சிக் குறவர்குடி மைந்தனே தவிர, தெய்வ மைந்தனாகப் பிறக்க வில்லை. தன்னுடைய செயற்கரிய செயல்களால் தமிழர் வழக்கப் படி பின் வந்த தலைமுறையினரால் தெய்வமாக வணங்கப் படுகிறான்.

தி.ருமுருகாற்றுப் படையும், பரிபாடலும் ஸ்கந்த - முருகன் கலப்பிற்கும், ஆரிய சமஸ்கிருத வழிபாட்டு முறைக்கும். துணை போகின்றன.

தற்போது அனைத்து முருகன் கோவிகளிலும் இருப்பது ஒரு தமிழ் ஆரியக் கலவைக் கடவுளே!

## பிற இலக்கியங்கள்

### அ) குறவரின் முருகன் பூசை முறைகள்

Notes on Criminal Classes of the Madras Presidency 1892. pages 48 and 49 of Chapter VI Frederick S. Mullaly இந்த நூலில் முருகனுக்கான பூசை முறைகள் குறவரால் எப்படிச் செய்யப் பட்டன என்பது விவரிக்கப் பட்டுள்ளது.

குறவரினத்தில் திருமண உறவுகளை முறைப்படுத்தத் தோற்றுவிக்கப் பட்ட குல முறைகளுக்குத் தனிச் சிறப்பு உண்டு. அவை அவ்வினத்திற்குக் குல தெய்வமான முருகனை வழிபடும் முறைகளில் அமைந்தவை. அவை, காவடி, மாணப்பாடி, மேலூத்தன், சாத்துப்படி, உய்யாலி, பண்டி என்று ஆறு ஆகும்.

காவடி எடுத்துச் செல்லுபவர்கள் காவடி குலத்தார்; மாண்புமிகு பக்திப் பாடல்களைப்

பாடுபவர்கள் மாணப்பாடி குலத்தார்; சிலைக்கு மேலூற்றி அபிஷேகம் செய்பவர்கள் மேலூத்தன் குலத்தார். சிலைக்கு ஆடை, ஆபரணங்கள் சாத்தி, ஒப்பனை செய்து மாலையிட்டு மரியாதை செய்பவர்கள் சாத்துப்படி குலத்தார்; விக்ரகத்தை வைத்து ஊஞ்சல் ஆட்டுபவர்கள் உய்யாலி குலத்தார்; விக்ரகத்தை தேரில் / வண்டியில் வைத்து இழுத்துச் செல்லுபவர்கள் பண்டி குலத்தார்; பிற்காலத்தில், உய்யாளி, காவடியுடனும், பண்டி, மாணப்பாடியுடனும் இணைந்து விட்டன.

மேலே குறிப்பிட்டுள்ள முருகன் வழிபாட்டில் நடத்தப் படும் ஆறு வகைச் சடங்குகளும் சிலை வழிபாட்டின் தொடக்கத்தில் தமிழ்க் குடியின் மூத்த இனமான குறவரினத்தில் தோன்றியவை. இந்த வழக்கத்தினைப் பார்த்தாலே தெரியும் முருகன் கோவில்கள் தொடக்கத்தில் குறவர் பராமரிப்பில் இருநதன என்பதும், அவர்கள்,சிலைகளைத்தொட்டுத்தான்வழிபாட்டுச் சடங்குகளைச் செய்துள்ளனர் என்பதும். அதே குறவர்கள் பின்னாளில் தீண்டாமைக்கு உள்ளாக்கப் பட்டார்கள். பிராமணர்கள், குறவரின் முருகனை / முருகன் கோவில்களை மட்டும் கைக்கொள்ளவில்லை; அவர்கள் முருகனைப் பூசித்த முறைகளையும் கைக் கொண்டார்கள்;. தற்போது பிராமண அர்ச்சகர்கள் கோவில்களில் நடத்தும், விக்ரக அபிஷேகம், அலங்காரம், ஊஞ்சலாட்டுதல், தேரில் வைத்து இழுத்தல் போன்றவை தொல் தமிழ்க் குறவர் வழக்கமே.

## இலங்கையில் முருகன்

Continuity and Change: The Kataragama Cult in Sri Lanka by N.Shanmugalingam : இந்நூலில், இலங்கையின் தொல் குடியான வேடர்களுக்கும் , கதிர்காமத்து முருகனுக்கும் உள்ள தொடர்பு குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.. இலங்கை வேடரும், தமிழக வேடரும் ஒரே குடியினர் என்பதையும், தமிழகத்து முருகன் - வள்ளி கதையும், கதிகாமத்து முருகன் - வள்ளி கதையும் ஒன்றே என்பதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கை வேடர்களின் தலைவர் பண்டில ஹெத்தோ (Bandilla Hethos) என்பவர், வள்ளியைத் தனது அக்கா என்றும், முருகனைத் தனது மச்சான் என்றும் கூறுவதைச் சுட்டிக் காட்டியுள்ளார். குறிப்பாக தொல் தமிழ் நாட்டில் முருகனுக்கு வள்ளி மட்டுமே ஒரே மனைவி என்ற நிலை இருந்தது போல், கதிர் காமத்தில் இப்போதும் தெய்வானைக்கு இடம் இல்லை என்பதையும் குறிப்பிடுகிறார்.

## முடிவுரை

இலக்கியங்களில் ஓரளவே அறிமுகமுள்ள என்னைப் போன்றவர்களுக்கே ஸ்கந்தனின் அசிங்கங்ககள் கண்ணில் படும் போது, அவற்றில் கரைகண்ட தமிழ் அறிஞர்கள் (சங்கத் தமிழ்ப் புலவர்கள் சிலருட்பட), தன் மானத் தமிழினத் தலைவர்களின் கண்ணில் அவை யெல்லாம் தென்பட வில்லையா? இந்த அசிங்கங்களை முருகன் மீது ஏற்ற விட்டு எப்படி வேடிக்கை பார்த்தார்கள் / பார்க்கிறார்கள் என்பது தான் எனக்குப் புரிய வில்லை!!!

இனியாவது தமிழ் முருகன், குறித்த உண்மைகள் பரவும் வகை செய்தல் வேண்டும்; ஸ்கந்த அசிங்கங்களிலிருந்து அவன் மீட்கப் பட வேண்டும் ஸ்கந்தன் - தேவ சேனா வேண்டும் என்போர் முருகன் - வள்ளியை விட்டு விட்டுத் தனிக் கோவில்கள் கட்டிக் கொள்ளட்டும்.

திரும்பும் வரலாறு: குறைந்த பட்சம் குற வள்ளியின் மகத்துவத்தையாவது உலகிற்கு உணர்த்தும் வண்ணமாக, நாகர்கோவில் வேளிர்மலை, குமார கோவிலில் குறவர் குடியினர், முருகன் வள்ளியைக் கூட்டிச் செல்லுதல், குறவர்களுடனான சண்டையில் முருகன் அவர்களைக் கொல்லுதல், வள்ளியின் வேண்டுகோள்படி முருகன் அவர்களை உயிர்ப்பித்தல் போன்றவை, பொருத்தமாக வேடங்கள் அணிந்து, குறவர் படுகளம் என்ற பெயரில் பல ஆண்டுகளாகத் தெருக்கூத்தாக நடத்தி வருகிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகளாகக் குறவர் குடியினர் பல முருகன் கோவில்களில், திருமுருகப் பெருவிழா, வள்ளிக்குச் சீர் கொடுத்தல் என்ற

பெயர்களில் விழாக்கள் எடுத்து வருகின்றனர். தற்போதைய முருகன் கோவில்களில் தொல் தமிழர் வழக்கப்படி அசைவ உணவு படைத்து வழிபட முடியுமா?

இக்கேள்விக்குப் பதிலாகச் சமீபத்தில், தேனியில், குறவர் குடியினர் தங்களுக் கென்று தனி முருகன் - வள்ளி கோவில் எழுப்பி, தங்கள் குல வழக்கப் படி மாமிச உணவு படைத்து, வழிபட்டுச் சங்க காலத்து உரிமையை மீட்டெடுத்து உள்ளனர்.. இப்படிப் பட்ட கோவிகள் பெருக வேண்டும். அது ஸ்கந்த முருகன் கலப்படத்தால் மூளைச் சலவை செய்யப் பட்ட தமிழர்களிடம் உண்மையான தமிழ் முருகன் யார்? என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

அந்தக் காலத்தில், தமிழ் முருகனை ஆரியர்கள் கைக் கொண்டது போல் இப்போது இன்னொரு ஆரிய இனக் குழு ஒன்று, முருகனைக் கைக்கொள்ள முயற்சிப்பதைக் கடந்த காலம் போலவே, தற்காலத் தமிழர்களும் வேடிக்கை பார்க்கும் கொடுமை நடக்கிறது. ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களைச் சேர்ந்த வாக்ரி போலி என்ற இந்தோ - ஆரிய மொழி பேசி, பறவை, நரி பிடித்தும், ஊசிமணி, பாசிமணி விற்றும் வாழும் வாக்ரி என்ற ஆரியப் பழங்குடியினர் இங்கு குருவிக்காரர் என அழைக்கப் படுகின்றனர். 5 எப்படியயோ “நரிக் குறவர்” என்ற தொல் தமிழ்க் குறவரின் அடைமொழிப் பெயர் கிடைத்தது., அதைப் பயன்படுத்தி, வள்ளியைத் தங்கள் அக்கா என்றும், முருகனை மச்சான் என்றும் உறவு சொல்லத் தொடங்கியுள்ளனர். இவர்களிடமிருந்து முருகனை எப்படிக் காக்கப் போகிறோமோ தெரிய வில்லை. அவர்களது அசல் பெயரான குருவிக்காரன் அல்லது நரிக்காரன் என்பதையே அரசுகள் அவர்களுக்கு அளிக்க வேண்டும். நரிக் குறவர் என்ற அழைப்புப் பெயரை நீக்க வேண்டும்.

**அடிக்குறிப்பு (Foot Notes)**

1. F1 P.T. Srinivasa Iyengar, Journal of Indian History & Vol. VII 1928 , Pre&Aryan Tamil culture . // When in later ages asceticism came to be a much respected way of life, and ascetics resorted to hills for peaceful medi&tation, he also became the ascetic god.
2. ஸ்கந்தனும் முருகனும் ஒன்றாக இணைக்கப்பட்ட பொழுது. கதைகள் புனையப்பட்டன.. தேவசேனை முதல் மனைவியாகவும் வள்ளி இரண்டாவது மனைவியாகவும் ஆனார்கள். ஆனால், தமிழர் பண்பாட்டு வளர்ச்சியில் வள்ளி தான் முருகனுக்கு ஒரே மனைவி // (வானமாமலை, முருக - ஸ்கந்த இணைப்பு Journal of Indian History & Vol. VII 1928 , Pre&Aryan Tamil culture by P.T. Srinivasa Iyengar, page 84,85.
3. // .the ancient worship of Murugan was the dance called Veriyadal or Velanadal, performed by his priest, who, like his god, was called, Velan, for both of them carried the weapon of the hill region, the Vel, a spear, .When a man is in distress he consults the priest of Murugan, who throws about the seeds of the Kalangu, (PÇ[S) or Kalar-kodi (PÇØöPõi) Guilandina bonduce, and from the lay of the seeds on a plate& reads the occult cause, of the man’s trouble and prescribes the worship of Murugan as a reme-dy. This ceremony is technically called Kalangu,//
4. F4 (Skanda Purana&G.V.Tagare) Chapter 31 & Kumra’s March against the City of Traksura After granting bless-ings unto him they requested Guha for the boon: This alone is our boon: Kill Traka, the sinner. After saying Let it be so to them, the enemy of Traka possessing great splendour mounted his peacock saying Yoga, Yoga.
5. F5 Journal of Indian History & Vol. VII 1928 , Pre&Ary-an Tamil culture by P.T. Srinivasa Iyengar, page 84,85. // . Kuravan tribe worshipped Seyon / Murugan , the Hill God. Murugan is worshipped by other Tamils also. While the others worshipped him as a vegetarian god, Kuravan people treated him as a non&vegetarian god. They had a separate way of worshipping him. . The worship of Muru-gan included the offering of cooked rice and meat for the removal of ills caused by that god //
6. F6 தமிழ் - தமிழ் அகரமுதலி காவடி - காத்தண்டு ; இறைவன் வேண்டுதலுக்கு எடுக்கும் காவடி ; காவு தடியிற் கொண்டு போகும் பொருள்.

7. F7 Journal of Indian History & Vol. VII 1928 , by P.T. Srinivasa Iyengar &&embraced one another and caught hold of one another's hands and danced the Kuravai (SµøÁ) dance on the open fields
8. F8 // வள்ளிக்கூத்து என்பது குறிஞ்சி நிலத்து மக்களின் கூத்து வகை. அதனைக் கூத்து என்று கருதுவதை விட ஒரு வழிபாடு என்று கருதுவதே பொருத்தமாக இருக்கும்.. ..// Games in Tholkappiyam and Akananooru && T. Kavitha.
9. F9. //வள்ளியும் முருகனும் குறிஞ்சி நிலத்திற்கு உரியவர்கள் ஆதலின் குரவை போலக் குறிஞ்சி நிலக் கூத்தாகவும், குழு நடனமாகவும் இருந்துள்ளது.. //. ஐவகை நிலங்களில் கூத்துகள் அன்றும் இன்றும். செ. மகேஸ்வரி )
10. F10 (Journal of Indian History & Vol. VII 1928, Pre&Aryan Tamil culture by P.T. Srinivasa Iyengar, page 84,85. //.. still followed by Kuravar through&out Southern India. Their favourite god was Murugan the God of the Hills, who has throughout the ages remained essentially a god enshrined on hill&tops, notwithstanding later affiliations with post& Vedic mythology.// )
11. F11 History of Tamils P.T.Srinivasa Iyengar & intrusion of Sanskrit Culture//.. The next was the introduction of words, concepts, poetic imagery, tales, mythological and otherwise, beliefs, superstitions and scientific, moral and religious teaching, .. Tamil literature became entirely dominated by that of the Northerners//
12. F12 Notes on Criminal Classes of the Madras Presidency 1892. pages 48 and 49 of Chapter VI Frederick S. Mullaly. The origin of the names of the sub&divisions is said to be & Kavadi & because they carry offerings to God carried on a pole; Wooyaloo & because they swing their offerings before the god; Manebady & because they are deemed fit persons to sing before the god; Manrikutti & because they offer shoes to God ( a Hindu custom ); Sathupadi & because their chief ceremony is adorning the gods with jewels, flowers and vestments; Bandy & because they assist at car feasts and drag the cars.

## உசாத்துணைகள்


1. https://ta.wiktionary.org/s/gz6
2. https://agarathi.com/word/%E0%AE%9A%E0%AF%80%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D
3. https://mandhiram.com/dictionary.php?searchedword=%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%9F%E0%AE%BFgooglevignette
4. Continuity and Change: The Kataragama Cult in Sri Lanka by N.Shanmugalingam :
5. Vaagri in Tamil Nadu by Bakthavachala Bharathi
6. திருக்குற்றாலக் குறவஞ்சி, திருமுருகாற்றுப் படை, தொல்காப்பியம், ஐங்குறுநூறு, குறுந்தொகை, அகநானூறு, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, நற்றிணை, கலித்தொகை, புறநானூறு, பெரும்பாணாற்றுப் படை, பதிற்றுப் பத்து, பரிபாடல், குறிஞ்சிப்பாட்டு.